முருகப்பெருமான் துணை

**மகான் தேரையர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.07.2023, புதன்கிழமை

1. மாதவராஜனே கலியுகத்தில்
மாதருமம் புரிகின்ற ஞானியே
பூதலத்தில் உன் பெருமை கூறி
புகலுவேன் அறிவுரை ஆசி
2. ஆசிதனை சோபகிருது நள்ளிதிங்கள்
அறிவிக்க சூல திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 03 ம் நாள், 19.07.2023, புதன்கிழமை)
நேசமுடன் தேரையரும் வழங்குவேன்
நிலவுலகம் தரும வழிகள் அடைய
3. அடையவே அன்னதான சேவை
அளவிலா ஆற்றும் தருமனே
தடையற உன் தரும சேவை
தரணியெங்கும் வளர்ந்தோங்க
4. ஓங்கவே மக்களிடை தருமபலம்
ஓங்கார பலமாக மாறியே
இங்கனமே எங்கும் மகாசக்தியாக
யுகத்தினில் அற்புதம் நடக்கும்
5. நடக்கவே நல்லோர்கள் மனம்
நடுங்கா காப்புத் தருவதற்கு
சுடரேற்றி அருளும் சூட்சுமனே
சுப்பன் அவதாரனே உமை போற்ற
6. போற்றவே பயபக்தி கூடும்
புண்ணிய பலமாக மாறி
மாற்றம் வாழ்வினில் கூடும்
மரணம் மறுமை வெல்லும்

7. வெல்லும் வரமும் உன் வழி
வேலவன் கடாட்சமாகப் பெருகி
அல்லும் பகலும் ஞானசேவை
ஆற்றல்பட அளவிலா புரிந்திட
8. புரிந்திட ஆளுமை சக்தியும்
பூர்வ சென்ம பலமாக மாறும்
அறிந்தும் அறியாமலும் செய்த
அனைத்துப் பிழைகளும் மாறி
9. மாறியே தெளிவு திடம் கூடி
மக்களிடை பூரணத்துவம் கிட்டும்
ஆறுமுகனாரே வந்து அருளும்
அதிசயமும் வாழ்வில் கண்டு
10. கண்டுமே தான் என்ற ஆணவம்
கன்மம் மாயை சகலதும் களைய
தொண்டுவழி சிறந்து நன்கு
தேசிகன் ஆசி பெற்றவர்களாக
11. ஆகவே நிலைகள் தேறி
அற்புதம் நடக்கும் உலகில்
மகத்துவம் ஞானிகள் ஆசிபட
மண்ணுலகில் மாற்றம் நிகழும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—